செய்தி வெளியீடு எண்:231 நாள்: 25.04.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.4.2017) தலைமைச் செயலகத்தில், 2016–ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு. போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது, சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருதுகளையும், 2015–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது மற்றும் 2015–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகளையும் சேர்த்து 52 விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் வழங்கிட ஆணை பிறப்பித்தார்கள். அவ்வகையில் அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்கும் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளருக்கு 'ஜி.யு.போப் விருது', உமறுப் புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டை போற்றும் வகையில், தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞருக்கு 'உமறுப் புலவர் விருது', சிறந்த தமிழ் அறிஞர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு 'தமிழ்ச் செம்மல் விருது', கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்கம் செய்பவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது', “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்று போற்றப்படும் காலத்தை வென்ற காப்பியத்தைத் தந்த இளங்கோவடிகள் பெயரில் 'இளங்கோவடிகள் விருது', சிறந்த தமிழ்ப் பெண் படைப்பாளருக்கு 'அம்மா இலக்கிய விருது', தரமான பிறமொழி படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு 'மொழி பெயர்ப்பாளர் விருது' ஆகிய புதிய விருதுகளை தோற்றுவித்து, தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் சான்றோர்களுக்கு 55 விருதுகளை அறிவித்து, சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளாக தமிழறிஞர்களுக்கு வழங்கி சிறப்பித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, 2016–ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருதிற்கு மாணவர் மன்றம் தமிழ் அமைப்பு தெரிவு செய்யப்பட்டு, விருதுத் தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை அந்த மன்றத்தின் நிர்வாகிகளுக்கும்;

கபிலர் விருதினை முனைவர் இல.க. அக்னிபுத்திரன் அவர்களுக்கும், உ.வே.சா. விருதினை முதுமுனைவர் ம.அ. வேங்கடகிருஷ்ணன் அவர்களுக்கும், கம்பர் விருதினை திரு. இலங்கை ஜெயராஜ் அவர்களுக்கும், சொல்லின் செல்வர் விருதினை திரு.பி. மணிகண்டன் அவர்களுக்கும், ஜி.யு.போப் விருதினை திருமதி வைதேகி ஹெர்பார்ட் அவர்கள் சார்பாக திரு. ஆறுமுகம், உமறுப்புலவர் விருதினை பேராசிரியர் முனைவர் தி.மு. அப்துல் காதர் அவர்களுக்கும்; இளங்கோவடிகள் விருதினை திரு.நா. நஞ்சுண்டன் அவர்களுக்கும், அம்மா இலக்கிய விருதினை திருமதி ஹம்சா தனகோபால் ஆகிய விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை;

2016–ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள் திருமதி நாகலட்சுமி சண்முகம் அவர்கள், திரு.அ. ஜாகிர் உசேன் அவர்கள், திரு. அல்லா பிச்சை (எ) முகம்மது பரிஸ்டா அவர்கள், திருமதி உமா பாலு அவர்கள், முனைவர் கா. செல்லப்பன் அவர்கள், செல்வி வி. சைதன்யா அவர்கள், திரு. சி. முருகேசன் அவர்கள், திரு. கு. பாலசுப்பிரமணியன் அவர்கள், திரு. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், முனைவர் கே.எஸ். சுப்பிரமணியன் அவர்கள்;

ஆகிய விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும், 2015–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதினை திரு. செ. முரளி (எ) செல்வ முரளி அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும்;

2015–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் திரு.வேம்பத்தூர் (எம்) கிருஷ்ணன் அவர்கள் (சென்னை மாவட்டம்), முனைவர் மா.கி. இரமணன் அவர்கள் (திருவள்ளூர் மாவட்டம்), திரு கூ.மு. துரை (எ) கவிஞர் கூரம் துரை அவர்கள் (காஞ்சிபுரம் மாவட்டம்), திரு.வி. பத்மநாபன் (எ) புலவர் வே. பதுமனார் அவர்கள் (வேலூர் மாவட்டம்), திரு.ந. நாகராசன் அவர்கள் (கிருஷ்ணகிரி மாவட்டம்), திரு.பா.இந்திரராசன் அவர்கள் (திருவண்ணாமலை மாவட்டம்), கவிஞர் பெ. ஆராவமுதன் அவர்கள் (விழுப்புரம் மாவட்டம்), முனைவர் அரங்க. பாரி அவர்கள் (கடலூர் மாவட்டம்), திரு.செ. சுந்தரம் (எ) வெண்பாவூர் செ. சுந்தரம் அவர்கள் (பெரம்பலூர் மாவட்டம்), முனைவர் ம. சோ. விக்டர் அவர்கள் (அரியலூர் மாவட்டம்), கவிஞர் பி. வேலுசாமி அவர்கள் (சேலம்

மாவட்டம்), திரு. தகடூர். வனப்பிரியனார் (எ) கா. இராமசந்திரன் அவர்கள் (தருமபுரி மாவட்டம்), புலவர் மா. சின்னு அவர்கள் (நாமக்கல் மாவட்டம்), முனைவர் ச.சந்திரகுமாரி அவர்கள் (ஈரோடு மாவட்டம்), திரு. ச. வரதசிகாமணி அவர்கள் (கரூர் மாவட்டம்), முனைவர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் (கோயம்புத்தூர் மாவட்டம்), திரு. ஆ. முருகநாதன் அவர்கள் (திருப்பூர் மாவட்டம்), திருமதி மணி அர்ச்சுனன் அவர்கள் (நீலகிரி மாவட்டம்), பேராசிரியர் தி.வெ. இராசேந்திரன் அவர்கள் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), திரு.ஞானாலயா பா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (புதுக்கோட்டை மாவட்டம்), திரு.தி. அனந்தராமன் அவர்கள் (சிவகங்கை மாவட்டம்), புலவர் தங்கராசு அவர்கள் (தஞ்சாவூர் மாவட்டம்), திரு. வீ.இராமமூர்த்தி அவர்கள் (திருவாரூர் மாவட்டம்), திரு.செ. செய்யது முகம்மது கலிபா சாகிப் அவர்கள் (நாகப்பட்டினம் மாவட்டம்), திரு.ஜெகாதா அவர்கள் (இராமநாதபுரம் மாவட்டம்), மறைந்த திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன் அவர்கள் (மதுரை மாவட்டம்) சார்பாக அவரது மகள் மருத்துவர் அனுராதா கணேஷ், திரு.மா. பெரியசாமி (எ) தமிழ்ப் பெரியசாமி அவர்கள் (திண்டுக்கல் மாவட்டம்), மறைந்த தமிழாசிரியர் திரு.ப. பாண்டியராசன் அவர்கள் (தேனி மாவட்டம்) சார்பாக அவரது மகன் சண்முகராஜன், முனைவர் கா.இராமச்சந்திரன் அவர்கள் (விருதுநகர் மாவட்டம்), முனைவர் கேப்டன் திரு.பா. வேலம்மாள் அவர்கள் (திருநெல்வேலி மாவட்டம்), திரு. கா. அல்லிக்கண்ணன் அவர்கள் (தூத்துக்குடி மாவட்டம்), முனைவர் சிவ. பத்மநாபன் அவர்கள் (கன்னியாகுமரி மாவட்டம்);

ஆகிய விருதாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.சேவூர் சோ. இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 25.4.2017**